பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
09 12 2024 7 15
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி ராஜஸ்தான் மற்றும் ஹரியானா மாநிலங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளில் இன்று பங்கேற்கிறார்.

2. உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெறும் கும்பமேளாவிற்கு 3 ஆயிரம் சிறப்பு ரயில்கள் இயக்கப்பட இருப்பதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. இந்திய இணையதள நிர்வாக அமைப்பின் 4வது மாநாட்டை மின்னனு மற்றும் தகவல்தொடர்புத்துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா இன்று தொடங்கி வைக்கிறார்.

4. தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

5. உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் குகேஷ் - சீனாவின் **Ding Liren** இடையிலான 12வது சுற்று ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி ராஜஸ்தான் மற்றும் ஹரியானா மாநிலங்களுக்கு இன்று செல்கிறார்.

ராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரில் நடைபெறும் நிகழ்ச்சி ஒன்றில் உலக அளவிலான ராஜஸ்தான் முதலீட்டு மாநாட்டை அவர் தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் அம்மாநில முதலமைச்சர் திரு. பஜன்லால் ஷர்மா, மத்திய மற்றும் மாநில அமைச்சர்கள் பலர் கலந்துகொள்கின்றனர்.

ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட வர்த்தகம் மற்றும் தொழில்துறை சார்ந்தவர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

இந்த மாநாட்டுக்கு முன்பாகவே 30 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கான முதலீடுகளில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

32 நாடுகளைச் சேர்ந்தவர்கள் இதில் பிரதிநிதிகளாக கலந்துகொள்கின்றனர்.

இன்று பிற்பகல் ஹரியானாவில் உள்ள பானிபட் நகரில் **Bima Sakhi Yojna** நிகழ்ச்சியை தொடங்கி வைக்கிறார்.

18 வயது முதல் 70 வயது வரை உள்ள மெட்ரிகுலேஷன் தேர்வில் வெற்றி பெற்ற மகளிருக்கு இந்த திட்டம் பயனுள்ளதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டம் மகளிருக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தரும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. நயாப்சிங் சைனி தெரிவித்துள்ளார்.

இதன்பின்னர் பிரதமர் திரு. நரேந்திர மோடி **Karnal**–லில் உள்ள மகாரானா பிரதாப் தோட்டக் கலைப் பல்கலைக்கழக வளாகத்தில் இதற்கான அடிக்கலை நாட்டுகிறார்.

**<<<<>>>>**

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், 3 நாள் பயணமாக நேற்று ரஷ்யா புறப்பட்டுச் சென்றார்.

இந்திய – ரஷ்ய ராணுவ மற்றும் பாதுகாப்புத்துறைக்கான 21வது தொழில்நுட்ப ஒத்துழைப்புக் கூட்டத்தில் அவர் நாளை பங்கேற்கிறார்.

இந்தக் கூட்டத்தில் ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. **Andrey Belousov** உடன் பல்வேறு பாதுகாப்புத்துறை சார்ந்த விஷயங்கள் குறித்து கலந்துரையாடுகிறார்.

மேலும் மண்டல மற்றும் உலக அளவிலான விஷயங்கள் குறித்தும் அவர்கள் விவாதிக்க உள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்திய கப்பற்படையில் புதிதாக இணைக்கப்பட உள்ள ஐ.என்.எஸ். துஷீல் கப்பலை இன்று அங்குள்ள **Kaliningrad** துறைமுகத்தில் இருந்து அறிமுகம் செய்து வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் இந்திய கப்பற்படை தலைமைத் தளபதி அட்மிரல் தினேஷ் கே. திரிபாதியும் கலந்துகொள்கிறார்.

மாஸ்கோவில் இரண்டாம் உலகப் போரின்போது உயிரிழந்த ரஷ்ய வீரர்களின் நினைவிடத்திற்கு சென்று திரு. ராஜ்நாத் சிங் மரியாதை செலுத்துகிறார்.

அதன் பின்னர் இந்திய வம்சாவளியினருடன் அவர் கலந்துரையாடுகிறார்.

<<<<>>>>

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல், இந்தியா – நார்வே இடையிலான வர்த்தக உறவுகளை வலுப்படுத்தும் விதத்திலான ஒப்பந்தங்கள் குறித்து விவாதித்துள்ளார்.

மும்பையில் இந்திய – நார்வே வர்த்தக அமைப்பு மற்றும் இந்திய தொழில்நுட்பக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர், இரு நாடுகளுக்கிடையிலான முதலீடு மற்றும் வர்த்தக உறவுகளில் உள்ள பிரச்சினைகளைக் களைவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கூறினார்.

உலக நாடுகளின் முக்கிய முதலீட்டுக் களமாக இந்தியா திகழ்வதாக அவர் கூறினார்.

நார்வேயில் உள்ள தொழில்துறையினர் இந்தியாவில் உள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்தி உலக வர்த்தகத்தை விரிவுபடுத்த முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஐரோப்பிய வர்த்தக அமைப்புடன் இந்தியா சமீபத்தில் கையெழுத்திட்டுள்ள ஒப்பந்தத்தின்படி ஸ்விட்சர்லாந்து, ஐஸ்லாந்து, நார்வே, **Liechtenstein** நாடுகளுக்கு இடையே வர்த்தக உறவுகள் மேலும் வலுவடையும் வாய்ப்புள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற இருக்கும் மஹா கும்பமேளாவிற்கான ஏற்பாடுகளை ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் நேற்று ஆய்வு செய்தார்.

பிரயாக்ராஜில் உள்ள 5 ரயில் நிலையங்கயையும் அவர் நேரில் பார்வையிட்டார்.

அதன் பின்னர் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அவர், மஹாகும்பமேளாவிற்காக கடந்த 2 ஆண்டுகளில் 5 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு பல்வேறு ரயில்வே கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறினார்.

மஹாகும்பமேளாவை ஒட்டி மூவாயிரம் சிறப்பு ரயில்கள் இயக்கப்பட இருப்பதாகவும், மொத்தமாக 13 ஆயிரம் ரயில்கள் இயக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

48 புதிய நடைமேடைகள் கட்டப்பட்டுள்ளதாகவும், 21 நடைமேடைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மஹாகும்பமேளாவை ஒட்டி புதிய கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளதாகவும், இங்கிருந்து ரயில்களின் போக்குவரத்து கண்காணிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

யாத்ரீகர்களின் வசதிக்காக அயோத்தியில் இருந்து பிரயாக்ராஜ்-க்கும் மறுமார்கத்தில் பிரயாக்ராஜில் இருந்து அயோதிக்கும் சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீர் உதம்பூரில் திஷா எனப்படும் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு கண்காணிபுக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மத்திய அரசின் திட்டங்களை செயல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தலைமையில் ஆய்வு நடைபெற்றது.

பிரதமரின் கிராம சாலைகள் திட்டம், வீட்டுவசதி திட்டம், விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டம், சமக்ரா சிக்ஷா உள்ளிட்ட திட்டங்கள் குறித்து விரிவான விளக்கம் வழங்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தின்போது சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு தொடர்பான திட்டங்களை செயல்படுத்துவது குறித்தும் அமைச்சரிடம் எடுத்துரைக்கப்பட்டது.

அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் உள்ள சிக்கல்களை குறைக்கும் விதத்தில் அரசு சேவைகள் மேம்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

மக்களின் வாழ்க்கையை எளிதாக்கும் விதத்தில் திட்டங்களை அமல்படுத்த வேண்டும் என்றும் திரு. ஜிதேந்திர சிங் வலியுறுத்தினார்.

<<<<>>>>

இந்திய இணையதள நிர்வாக அமைப்பின் 4வது மாநாட்டை மின்னணு மற்றும் தகவல்தொடர்புத்துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா இன்று தொடங்கி வைக்கிறார்.

புதுதில்லியில் இரண்டு நாள் நடைபெறும் இந்த மாநாட்டில் இணையதளங்களைப் பயன்படுத்துவதில் உள்ள பாதுகாப்பு மற்றும் மின்னணு இடைவெளி குறித்தும் புதிய தொழில்நுட்பங்களை நாட்டின் வளர்ச்சிக்கு அறிமுகப்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்படுகிறது.

இணையதள நிர்வாகத்தில் புதுமை என்ற தலைப்பில் இந்த மாநாடு நடைபெறுகிறது.

<<<<>>>>

இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் திரு. விக்ரம் மிஸ்ரி இன்று பங்களாதேஷ் செல்கிறார்.

அந்நாட்டின் முன்னாள் பிரதமர் திருமதி ஷேக் ஹசீனா பதவியில் இருந்து நீக்கப்பட்ட பின் முதல் முறையாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சக உயரதிகாரி ஒருவர் அந்நாட்டுக்கு செல்வது முதல்முறை என்று வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு. ரந்தீப் ஜெய்ஸ்வால் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பங்களாதேஷ் வெளியுறவுத்துறை செயலாளரையும் சந்தித்து அவர் உரையாடுகிறார்.

சமீபத்தில் அங்குள்ள சிறுபான்மையின இந்துக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை அடுத்து இரு நாடுகளுக்கு இடையே ஏற்பட்டிருந்த கசப்பான சூழ்நிலையில் தற்போது வெளியுறவுச் செயலாளர் அங்கு செல்வது முக்கியத்தும் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவையின் இரண்டு நாள் கூட்டம் இன்று தொடங்குகிறது.

இந்தக் கூட்டம் இன்று காலை மணி 9.30க்கு தொடங்குகிறது.

இதில் டங்ஸ்டன் சுரங்க உரிமையை ரத்து செய்வது தொடர்பான அரசின் தனித்தீர்மானத்தை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் சட்டப்பேரவையில் கொண்டு வருகிறார்.

அதன் பின்னர் சட்டப்பேரவைக் கட்சித்தலைவர்கள் பேசிய பிறகு தீர்மானம் நிறைவேற்றப்படும்.

முன்னதாக கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கையை மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு தாக்கல் செய்கிறார்.

நாளை கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கை மீது விவாதம் நடைபெறுகிறது.

<<<<>>>>

அரசியல் சாசனம் அறிவோம் குறித்த சிறப்பு நேர்காணல் நிகழ்ச்சிக்கு சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

வழக்கறிஞர் சேதுராமனுடன், ஊடகவியலாளர் சியாமளா பங்கேற்கும் இந்த நிகழ்ச்சியின் இரண்டாம் பகுதி ஒருங்கிணைந்த அலைவரிசையில் இன்றிரவு எட்டரை மணிக்கு ஒலிபரப்பாகிறது.

<<<<>>>>

வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி இன்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுப்பெறும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து தமிழகத்தில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

சிங்கப்பூரில் நடைபெற்று வரும் உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் குகேஷ் - சீனாவின் **Ding Liren** இடையிலான 12வது சுற்று ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

இதுவரை நடைபெற்றுள்ள 11 சுற்று ஆட்டங்களின் அடிப்படையில் இந்தியாவின் குகேஷ் 6 புள்ளிகள் பெற்று முன்னிலையில் உள்ளார்.

**Ding Liren**, 5 புள்ளிகள் எடுத்துள்ளார்.

--------------

ஆசியக் கோப்பை மகளிர் ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் பங்களாதேஷுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்றது.

மஸ்கட்டில் நேற்றிரவு நடைபெற்ற போட்டியில் 13-1 என்ற கோல் கணக்கில் இந்தியா வென்றது.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் இந்தியா – மலேசியாவை எதிர்கொள்கிறது.

--------------

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் ஆசிய கிரிக்கெட் போட்டியில் நடப்புச் சாம்பியனான பங்களாதேஷ் - இந்தியாவை 59 ரன் வித்தியாசத்தில் தோற்கடித்தது.

ஆசிய பசிஃபிக் காது கேளாதோருக்கான விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 55 பதக்கங்களுடன் 5வது இடத்தில் உள்ளது.

மலேசியாவில் நடைபெற்ற இப்போட்டியில் 8 தங்கம், 18 வெள்ளி, 29 வெண்கலம் உள்ளிட்ட 55 பதக்கங்களை இந்தியா வென்றது.

இப்போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய வீரர்களுக்கு மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா பாராட்டு தெரிவித்தார்.

இவர்களின் சாதனை இளையோருக்கு உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

**<<<<The End>>>>**